# August 7, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ரஷியாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்த இந்தியா முன்வராததால், ஏற்கெனவே அறிவித்த 25 சதவீத வரியை 50 சதவீதமாக உயர்த்துவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார். முன்பு அறிவிக்கப்பட்ட 25 சதவீத வரி (ஆக. 7) அமலுக்கு வர இருக்கிறது. உயர்த்தப்பட்ட வரி அடுத்த 21 நாள்களில் அமலுக்கு வரும் (ஆக.27) என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
2. ஆகஸ்ட் 29-ஆம் தேதி தனது பயணத்தின் முதல்கட்டமாக ஜப்பான் செல்லும் பிரதமர் மோடி, அங்கு இந்தியா-ஜப்பான் ஆண்டு மாநாட்டில் அந்நாட்டு பிரதமருடன் இணைந்து பங்கேற்கிறார். தொடர்ந்து அங்கிருந்து சீனாவுக்கு செல்லும் அவர் தியான்ஜின் நகரில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வருடாந்திர மாநாட்டில் கலந்து கொள்கிறார். இந்த மாநாடு ஆகஸ்ட் 31 - செப்டம்பர் 1-ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

   i. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் பாகிஸ்தானும் உறுப்பினராக உள்ளதால் அந்நாட்டு பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப்பும் இந்த மாநாட்டில் பங்கேற்க வாய்ப்புள்ளது. அப்படி பங்கேற்றால் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு இந்தியா-பாகிஸ்தான் பிரதமர்கள் ஒரே நிகழ்ச்சியில் கலந்துகொள்வது முதல் நிகழ்வாக அமைய வாய்ப்புள்ளது.

3. வங்கிகளுக்கான வட்டி விகிதம் (ரெப்போ ரேட்) எவ்வித மாற்றமும் இன்றி 5.5 சதவீதமாக தொடரும் என்று இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அறிவித்தது. இதனால், வீடு, வாகனம், தனிநபர் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்களுக்கான வட்டி விகிதமும், வங்கிகளில் நிரந்தரவைப்பு, தொடர்வைப்பு உள்ளிட்ட சேமிப்புத் திட்டங்களுக்கு வங்கிகள் அளிக்கும் வட்டியும் குறைக்கப்படாமல் அதே நிலையில் தொடர வாய்ப்புள்ளது.
4. ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது அமெரிக்கா அணுகுண்டு தாக்குதல் நடத்தியதன் 80-ஆவது ஆண்டு நினைவு தினம் அந்த நகரில் கடைப்பிடிக்கப்பட்டது. 120 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், அணுகுண்டு வீசப்பட்ட நேரமான காலை 8:15 மணிக்கு அதற்கான நினைவிடத்தில் மௌன அஞ்சலி செலுத்தினர்.

   i. பிரதமர் ஷிகெரு இஷிபா, மேயர் கசுமி மாட்சுய் உள்ளிட்ட தலைவர்கள் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தனர்.
   ii. கடந்த 1945 ஆகஸ்ட் 6-ல் ஹிரோஷிமா மீது அமெரிக்கா நடத்திய அணுகுண்டுத் தாக்குதலில் 1.4 லட்சம் பேர் உயிரிழந்தனர்.
   iii. மூன்று நாள்களுக்குப் பின் நாகசாகி நகரில் நடத்தப்பட்ட மற்றோர் அணுகுண்டு வீச்சில் சுமார் 70,000 பேர் உயிரிழந்தனர். பின்னர் ஆகஸ்ட் 15-ல் ஜப்பான் சரணடைந்து, இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது நினைவுகூரத்தக்கது.

5. வரும் செப். 1-ஆம் தேதிக்குள் தங்கள் நாட்டில் வசிக்கும். பதிவு பெற்ற 13 லட்சம் ஆப்கன் அகதிகளை வெளியேற்றுவ தற்கான பணிகளை பாகிஸ்தான் அரசு தொடங்கியது.

6. வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா அரசு கவிழ்க்கப்பட்டதற்குப் பிந்தைய பொதுத் தேர்தல் வரும் பிப்ரவரி மாதம் நடைபெறும் என்று இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் அறிவித்தார்.
7. கடந்த சில நாள்களில் மட்டும் சீனாவில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு சிக்குன்குனியா தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நோய் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் தொடங்கினர்.
8. மத்திய அரசின் நிதியுதவி பெறும் அமைப்புகளே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வரையறைக்குள் வருமென தேசிய விளையாட்டு நிர்வாக மசோதாவில் மத்திய விளை யாட்டு அமைச்சகம் திருத்தம் கொண்டு வந்துள்ளதால், பிசிசிஐ அந்தச் சட்ட வரம்பில் வராமல் தப்பித்தது.
9. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**

    i. ஸ்டீவ் விட்காஃப் - அமெரிக்க சிறப்புத் தூதர்
    ii. நிக்கி ஹேலி - ஐக்கிய நாடுகள் சபைக்கான முன்னாள் அமெரிக்க தூதர்
    iii. அஜித் தோவல் - இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்